## அமானா வங்கி ஒன்லைன் வங்கிச்சேவை

| | |
|---|---|
| உள்ளம்சங்கள் | • ஒன்லைன் வங்கிச் சேவைக்கான சுய பதிவு<br>• உங்களின் ஏதேனும் வைப்புக் கணக்குகள் மற்றும் முற்பணங்களை அணுகல்<br>• ஒரு தடவை பரிமாற்றங்கள் மற்றும் அனுகூல முகாமைத்துவம் அடங்கலாக உள்ளக மற்றும் வெளியக நிதிப் பரிமாற்றங்கள்<br>• கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள்<br>• புதிய தவணை முதலீட்டு கணக்குகள்<br>• நிலையான ஆணை செயற்படுத்தல்கள்<br>• பரிவர்த்தனை பற்றுச்சீட்டுகளை பகிர்தல் அல்லது டவுன்லோட் செய்தல்<br>• Biometric login மற்றும் OTP உறுதிப்படுத்தல் அடங்கலாக ஒன்லைன் வங்கியியல் பாதுகாப்பில் உயர் நியமம் |
| App ஐ எவ்வாறு பயன்படுத்துவது | • App ஐ டவுன்லோட் செய்து, வங்கியுடன் பதிவு செய்யப்பட்டுள்ள உங்களது தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி உங்களை நீங்களே பதிவு செய்துகொள்ளுங்கள்.<br>• உங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்து கொள்ள, அழையுங்கள் 0117 756 756<br>• உங்கள் மொபைல் இலக்கத்தை பதிவு செய்வதற்கு, அருகிலுள்ள கிளைக்கு விஜயம் செய்யுங்கள்<br>• இணைந்த கணக்குதாரர்கள், பதிவு செய்து கொள்ள இங்கே அழுத்தவும்<br><br>மேலதிக தகவல்களுக்கு ஒன்லைன் வங்கிச்சேவை இணையத்தளத்தை பார்க்கவும். |
| அந்தரங்கக் கொள்கை அறிவித்தல் | அமானா வங்கி மொபைல் அப்ளிகேஷன் தொடர்பான அந்தரங்க கொள்கை அறிவித்தலை பார்க்க இங்கே அழுத்தவும் |

# வங்கிச் சேவைகள்

Amãna Bank

| | |
|---|---|
| உங்களின் வங்கி App மற்றும் இணைய போர்டல் ஊடாக சேவையை கோரல் | உங்களது வங்கி அனுபவத்திற்கு புதிய வரைவிலக்கணத்தை வழங்கும், அமானா வங்கியின் Message to Bank சேவைக்கு உங்களை வரவேற்கின்றோம். எமது வங்கியின் App இலுள்ள பாதுகாப்பான Email Us வசதியினூடாக எம்முடன் தொடர்புகொண்டு, உங்களது கைவிரல் நுனியில் பலதரப்பட்ட வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.<br><br>கீழே தரப்பட்டுள்ள இணைய போர்டல்களை அணுக, அவற்றின் மீது அழுத்தவும்.<br>• Corporate Web Portal<br>• Personal Web Portal |
| கட்டணங்கள் மற்றும் கூலிகள் | தற்போதைய கட்டணங்கள் மற்றும் கூலிகள் எமது நிறுவன இணையத்தளத்தில் காணப்படும் : https://www.amanabank.lk/tariff-services.html |

## அமானா வங்கி WHATSAPP வங்கிச்சேவை

| | |
|---|---|
| உள்ளம்சங்கள் | WhatsApp ஊடாக "Hi" எனப் பதிவிடுவதன் மூலம் உங்களது வங்கிச் சேவைகளை இன்றே ஆரம்பியுங்கள். எந்நேரமும், எவ்விடத்திலிருந்தும் உங்களது நிதியைக் கையாளுவதற்கு பாதுகாப்பான மற்றும் இலகுவான வழியைப் பெற்றுக்கொள்ளுங்கள். இச்சேவையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கிடைப்பதுடன், உங்களுக்கு விருப்பமான மொழியில் மிகவும் இலகுவான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட அனுபவத்தை வழங்குகின்றது.<br>**காணப்படும் தெரிவுகள்**<br>1. **எனது கணக்கு மீதியை அறிதல்**<br>உங்களின் நடைமுறை கணக்கு, சேமிப்பு கணக்கு மற்றும் தவணை முதலீடுகளின் மீதிகளை உடனுக்குடன் பார்வையிடலாம்.<br>2. **எனது வசதிகள்**<br>வங்கியுடன் ஏற்படுத்தியுள்ள நிதி ஏற்பாடுகளின் விபரங்களை அணுகல்.<br>3. **பணப் பரிவர்த்தனை / கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள்**<br>அமானா வங்கியின் டிஜிட்டல் வங்கியியல் கட்டமைப்பை நேரடியாக அணுகி பணப் பரிமாற்றங்கள், கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் பல சேவைகளை மேற்கொள்ள நேரடி லிங்க்களை பெறுங்கள். |

Amãna Bank

| | |
|---|---|
| | 4. **டெபிட் அட்டை சலுகைகள்**<br>பிரத்தியேகமான டெபிட் கார்ட் சலுகைகள், பங்காளர் விலைக்கழிவுகள் மற்றும் அத்தியாவசிய ஊக்குவிப்புத்திட்டங்கள் பற்றிய உடனுக்குடனான மெருகேற்றங்களை பெறுங்கள். |
| தகைமை | • பதிவு செய்யப்பட்ட மொபைல் இலக்கத்தைக் கொண்ட சகல அமானா வங்கி வாடிக்கையாளர்களுக்கும் கிடைக்கும்.<br>• பாதுகாப்பு மற்றும் தனிப்பட்ட தன்மையை உறுதி செய்யும் வகையில், உங்களின் அமானா வங்கி கணக்குடன் தொடர்புபடுத்தப்பட்ட மொபைல் இலக்கத்தினூடாக மாத்திரம் சேவைகளை அணுக முடியும். |
| அனுகூலங்கள் | • end-to-end encrypted messaging ஊடாக தொடுகையற்ற மற்றும் பாதுகாப்பான அணுகல்<br>• வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் 24/7 நேரமும் கிடைக்கும்<br>• அத்தியாவசிய கணக்கு தகவல்களை வேகமாக மற்றும் இலகுவாக அணுகல்<br>• இந்த சேவையை பயன்படுத்துவதற்கு எவ்வித மேலதிக கட்டணங்களும் இல்லை<br>• டிஜிட்டல் வங்கியியல் பரிவர்த்தனைகளுக்காக ஒப்பற்ற லிங்க்கள்<br>• SMS ஊடான OTP உடனான பாதுகாப்பு |
| எவ்வாறு ஆரம்பிப்பது | 1. உங்கள் contacts இல் **+94 70 775 6756 ஐ** Save செய்யவும் அல்லது இந்த லிங்கை click செய்யவும்: https://bit.ly/AmanaWAB<br>2. WhatsApp ஐ திறந்து **"Hi"** எனும் தகவலை save செய்த இலக்கத்துக்கு அனுப்பவும்.<br>3. chat window இல் திரையில் தென்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றவும்.<br>4. மொழித் தெரிவு மற்றும் நியதி மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதன் பின்னர், அடுத்துவரும் பாவனைகளில் பாவனையாளர்களிடம் அவை மீண்டும் கோரப்படமாட்டாது. |

## அமானா வங்கி CONNECT

| | |
|---|---|
| தயாரிப்பு விளக்கம் | **அமானா வங்கி Connect** என்பது அமானா வங்கிக்கான உங்களின் முழுமையான டிஜிட்டல் திறவுகோலாகும் - வங்கியின் சேவைகளை ஆராய்வதற்கும், வாடிக்கையாளர் சேவையுடன் தொடர்புகொள்வதற்கும், வங்கி நடவடிக்கைகளை இலகுவாக்கும் கருவிகளை அணுகுவதற்கும் உதவும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஏற்கனவே எமது வங்கியின் வாடிக்கையாளராக இருந்தாலும் அல்லது அமானா வங்கி வழங்கும் சேவைகள் குறித்து அறிய விரும்புபவராக இருந்தாலும், தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், எம்முடன் இணைந்திருப்பதற்கும் மற்றும் வங்கி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அமானா வங்கி Connect ஒரு பாதுகாப்பான மற்றும் இலகுவான வழியாகும். இவை அனைத்தையும் ஒரே *App* ஊடாக நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். |

# வங்கிச் சேவைகள்

| | |
|---|---|
| தயாரிப்பு உள்ளம்சங்கள் | • **ஒன்லைனில் கணக்கு ஆரம்பித்தல்**<br>உங்களது கைபேசியூடாக ஒரு சேமிப்புக் கணக்கை ஆரம்பிப்பதன் மூலம், அமானா வங்கியுடனான உங்களது பயணத்தை தொடங்குங்கள்.<br>• **Call us வசதி**<br>தேடல்கள் எவையுமின்றி, உங்களது தேவைக்கேற்ப அமானா வங்கியின் உரிய அதிகாரியுடன் உடனுக்குடன் தொடர்புகொள்ளுங்கள்.<br>• **'Your Bank' ஒன்லைன் வங்கிச்சேவை அணுகல்**<br>பணப்பரிமாற்றங்களை மேற்கொள்ளவும், கட்டணங்களைச் செலுத்தவும் மற்றும் உங்களது கணக்குகளை நிர்வகிக்கவும் வங்கியின் இணைய வங்கிச் சேவை தளத்தை எவ்விதத் தடங்கலுமின்றி இலகுவாக அணுகுங்கள்.<br>• **கூட்டாண்மை ஒன்லைன் வங்கிச் சேவை அணுகல்**<br>வணிக மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட அமானா வங்கியின் இணைய வங்கிச் சேவைத் தளத்தினுள் பிரவேசியுங்கள்.<br>• **நிதி வசதிக்கு விண்ணப்பித்தல்**<br>நிதிவசதிகள் பற்றிய தகவல்களை அறிந்துகொள்வதற்கும், உங்களது விண்ணப்பங்களை இணையம் ஊடாகச் சமர்ப்பிப்பதற்கும் இச்சேவையைப் பயன்படுத்தலாம்.<br>• **டெபிட் அட்டை சலுகைகளை பார்வையிடல்**<br>அமானா வங்கியின் டெபிட் கார்டு உரிமையாளர்களுக்காக வழங்கப்படும் மிகப்புதிய சலுகைகளை இங்கிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.<br>• **WhatsApp வங்கியியல்**<br>கணக்கு மீதி அறிய, நிதி வசதியின் விபரங்களை பார்வையிட மற்றும் பல அம்சங்களுக்கு அமானா WhatsApp வங்கிச் சேவையை அணுகவும்.<br>• **கிளை கண்டறிதல்**<br>கிளை கண்டறிதலுடன் அருகிலுள்ள அமானா வங்கி கிளையை அல்லது ATM ஐ கண்டறியவும்.<br>• **அமானா வங்கியிலுள்ள தொழில் வாய்ப்புகளை அறிவதற்கு**<br>அமானா வங்கியில் உங்களின் தொழில் வாய்ப்பை கட்டியெழுப்புவதற்கு தற்போது காணப்படும் பதவி வெற்றிடங்கள் மற்றும் வாய்ப்புகளை அறியுங்கள்.<br>• **கருத்தளிப்புகள்**<br>உங்களின் கருத்துகள் முக்கியமானவை. உங்களின் சிந்தனைகளை பகிர அல்லது பிரச்சனைகளை பதிய feedback ஐ பயன்படுத்தவும்.<br>• **Orphan Care இணையத்தளம்**<br>அநாதரவான பிள்ளைகளுக்கு ஆதரவளியுங்கள். மேலும் அறிந்து கொள்ள மற்றும் பங்களிப்புச் செய்வதற்கு app இல் Orphan Care பகுதியை பார்க்கவும். |

## SMS அலேர்ட்கள் மற்றும் E-கூற்றுகள்

| | |
|---|---|
| SMS அலேர்ட் விளக்கம் மற்றும் உள்ளம்சங்கள் | அமானா வங்கியின் SMS அலர்ட்ஸ் சேவையைப் பெற்றுக்கொள்வதன் மூலம், உங்களது கணக்கில் இடம்பெறும் பணப்பரிமாற்றங்களை உடனுக்குடன் கண்காணித்திடுங்கள். பின்வரும் பணப்பரிமாற்றங்கள் இடம்பெறும்போது, உங்களது கணக்கின் தற்போதைய மீதித் தொகையுடன் கூடிய SMS உங்களது தொலைபேசிக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்படும்.<br>• டெபிட் அட்டை பரிவர்த்தனைகள்<br>• இலாப பகிர்வு<br>• பண வைப்பு மற்றும் பண மீளப் பெறல்கள்<br>• உள்ளக பண அனுப்பல்கள்<br>• சம்பள அனுப்பல்கள்<br>• உள்ளக மற்றும் வெளியக பணப் பரிவர்த்தனைகள்<br>• காசோலை மாற்றம்<br>• நிலையான கட்டளை பரிவர்த்தனைகள்<br>• கட்டணப் பட்டியல் கொடுப்பனவு அலேர்ட்கள் |
| E- கூற்று விளக்கம் | வீட்டிலிருந்தே E-கூற்று வசதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்: இப்போது நீங்கள் உங்களது வீட்டிலிருந்தபடியே பாதுகாப்பான முறையிலும் சௌகரியமாகவும் அமானா வங்கியின் E-கூற்று வசதிக்காகப் பதிவு செய்துகொள்ள முடியும். |
| எவ்வாறு விண்ணப்பிப்பது | SMS அலேர்ட்கள் மற்றும் E-கூற்றுகள் பதிவுக்காக இங்கே அழுத்தவும் |

Amãna Bank

| | |
|---|---|
| முறைப்பாடுகள் மற்றும் கருத்தளிப்புகள் | எமது வாடிக்கையாளர் தீர்வுகள் நிலையத்துடன் 24x7 நேரமும் நீங்கள் தொடர்பு கொண்டு, உங்கள் கருத்துகளையும், முறைப்பாடுகளையும் மேற்கொள்ளலாம். உங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக எமது அணியினர் தயாராக இருப்பார்கள்.<br><br>வாடிக்கையாளர் தீர்வு நிலைய இலக்கம் :+94 11 7 756 756<br>மின்னஞ்சல் : info@amana.lk \| feedback@amana.lk<br>எமது இணையத்தளத்தில் உங்களின் விசாரணைகளை சமர்ப்பிப்பதற்கு www.amanabank.lk<br><br>எவ்வாறாயினும், உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிடின், பின்வரும் முகவரிக்கு தபால் மூலமாக அல்லது மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளலாம்:<br>The Manager - Service Quality Assurance<br>Amana Bank,<br>No. 486, Galle Road, Colombo 03<br>அல்லது e-mail<br>servicequality@amana.lk |

| | |
|---|---|
| | *அதன் பின்னரும் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாவிடின், சுயாதீன நிதி குறைகேள் அதிகாரியின் சேவைகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம். நிதிசார் குறைகேள் அதிகாரியின் பின்வரும் அலுவலகத்துடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*<br><br>Financial Ombudsman,<br>No.1, Bethesda Place, Milagiriya, Colombo 04.<br>Telephone: + 94 11 2595624 Fax: +94 11 2595625 |